# DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif cum Judicial Magistrate, Cheyyur
CC Case No.182/2025
Prosecution witnesses. PW2, LW1

| | |
|---|---|
| பெயர். திரு. தர்மன் | ஜாதி. |
| தந்தை பெயர்.திரு.வேலாயுதம் | தொழில். |
| கிராமம். | சமயம். |
| தாலுக்கா. | வயது. |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 29th day of June, 2026**

எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. U/s.355 of BNSS மனு தாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது ஓரத்தி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 28.03.2025ம் தேதியில் 15.00 மணியளவில் சூணாம்பேடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கரும்பாக்கம் கிராமத்தில் மதுவிலக்கு வேட்டைக்காக நான் மற்றும் உதவி ஆய்வாளர் திரு.செல்வம் முதல் நிலை காவலர் திரு.ராஜன் ஆகியோர் பார்ட்டி சகிதம் ரோந்து பணியில் இருந்தபோது கரும்பாக்கம் எதிரி ஜெயக்குமார் வீட்டின் அருகே சென்று பார்த்தபோது 10 லிட்டர் மண்பாணையில் 4 பானைகள் வீதம் 38 லிட்டர் பணங்கள் இருந்தது. மேற்படி எதிரியை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். மேற்படி எதிரியை கைது செய்து பின்பு மேற்படி பொருள்களை 15.15 மணியளவில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் போலிஸ் பார்ட்டி சகிதம் செய்து பின்பு அன்றைய தினம் 15.30 மணிக்கு அழித்தல் மகசர் மூலம் சம்பவ இடத்திலேயே கொட்டி அழிக்கப்பட்டது. அந்த அழித்தல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம்

என்னுடையது தான். **(அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ,3 ஆகவும், அழித்தல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**)

3. காவல் நிலையம் வந்து 17.45 மணிக்கு எதிரி மீது நிலைய குற்ற எண்.145/2025, U/s.4(1)(C) r/w 4(1)(d) TNP Act ல் காவல் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். நான் உதவியாக இருந்தேன். வழக்கு பற்றி காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

4. பொதுமக்கள் சாட்சிகளை யாரையாவது விசாரித்தோமா என்றால் இல்லை. நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக எங்கள் ஆய்வாளர் போட்ட பொய் வழக்குக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சம்பவ இடம் சென்றிருந்தால் எங்கள் ஆய்வாளர் வரைபடம் தயார் செய்து பொதுஜன சாட்சிகளை சாட்சியாக விசாரித்திருப்பார் என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது)**
**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.